
கண்ட ஆனந்தம்! ௨
பூஜ்யஸ்ரீ சத்குரு தூளி பாபா



# கண்ட ஆனந்தம்

## இதழ் ௨

வெளியீடு :
அன்பின் குடில்,
253/1, மேட்டூர் - பவானி மெயின் ரோடு,
கோம்பூர், நெரிஞ்சிப்பேட்டை,
அந்தியூர் தாலுக்கா, ஈரோடு மாவட்டம்,
தமிழ்நாடு - 638 311
தொலைபேசி : (04256) 227655
மின் அஞ்சல் : anbinkudil@yahoo.co.in

முதற்பதிப்பு தை 2015

பிரதிகள் : 300

அட்டைப் படம் : ஓம் பர்வதம்

அச்சிட்டோர்:
ஆரித்ரா பிரிண்டர்ஸ்,
பெங்களூர் - 560 003.
தொலைபேசி : (080) 23346025

## பொருளடக்கம்


1. பக்தீ ........................................................ 111

௨. பத்ரி ஸத்ஸங்கம் ......................... 11௪



௫ பக்க

ஜனார்த்தன! நாராயண! (III)

என்னும் நாமங்கள் ஜனார்த்த நாராயண எனஇணைந்திருக்கிறது.


பின்தொடர்ச்சி :-

ஸ்ரீகிருஷ்ண, கோவிந்த, ஹரேமுராரே, ஜனார்த்த, நாராயண, வாசுதேவா!

(1) ஸ்ரீகிருஷ்ண :- வஞ்சகம், சூழ்ச்சி, பொய்! ஆகிய தோஷகுணங்களை நாசம் செய்யும்.

(௨) கோவிந்த :- பசுத்தன்மை என்ற ஜீவத்தன்மை என்ற (நான் & எனது) பாசத்தை!

முழுமையாக நாசம் செய்யும்.




|| 2 ||

முரன் என்ற அசுரன் மிகவும் மூர்க்கன். மிகவும் கொடியவன். அதிபயங்கர முரடன். ஆகவே அவன் குணத்தை உதாரணமாக கொண்டு முரட்டு குணத்தை நாசம் செய்பவன் என கருத்தில் கொள்க.

(3) **ஹரே முராரே:** — முரன் என்ற அசுரனை ஸம்ஹாரித்தவனே! அதாவது

போகாத! போக்கடிக்க முடியாத **முரட்டு** குணங்கள் எல்லாம் போக்கடிப்பவனே!!!

(4) **ஜனார்த்தன:** — **நீயே கதி!** வேறு கதி இல்லை என முழுமையாக சரண் புகுந்து **கதறி** அழும் **ஸாது** ஜனங்களை ரக்ஷிப்பவனே



5 நாராயணா:- அமங்கலங்கள் எல்லாம்

நாசம் செய்து ; வைப மங்களங்களாய்

அருள்பவனே!

6 வாசுதேவா :- சர்வ பீராணை

பதியாக இருந்துகொண்டு;

சகல ஜீவ கோடிகளையும், அசைந்து

இசைக்கின்ற மூல காரணனே!

உன் திருவடி பணிந்து நமஸ்கரிக்கின்றோம்!



# உ பக்தி!

## ஸத்ஸங்கம்.

அவன் கண்ணன் கருணையினையும்;

உங்களை போன்ற மெய் அன்பர்கள் ஆசியினையும்;


இம்முறை நடந்த ஸ்ரீ பத்ரியாத்திரையானது; பிரம்மானந்தமாய் நடைபெற்று நிறைவானது.

எமதய்யனும்! எம் ஸ்ரீ குருதேவரும்!

இப்பைத்தியத்தின் உடல் நிலை காரணமாகவும்!

ஏற்று வந்த "பணி" பூரணமாக நிறைவேறும்

காரண, காரிய நிமித்தமாகவும்!






விமானத்தில் பயணம் செய்ய அனுமதி தந்தமையாலும், கண்டா & ஸ்ரீ பத்ரி! யாத்திரைக்கு விமானத்தில் பயணம் செய்கிறோம்.

இம்முறை ஸ்ரீ பத்ரி யாத்திரையானது, ஸ்ரீ கேதாரம் & ஸ்ரீ பத்ரி யாத்திரையாக ஹெலிகாப்டர் மூலமாக பயணம் செய்ய அனுமதி கிடைத்தது.


அப்படி ஹெலிகாப்டர் மூலமாக,





ஸ்ரீ கேதாரம் & ஸ்ரீ பத்ரிநாத் ஆகாய
மார்க்கமாக செல்லும் போது, வழியில்
ஹிமாலயா மெய்யன்பர்கள் பலரை
தரிசிக்கும் பாக்கியம் பெற்றோம்.
ஸத்சங்கங்கள் நடந்த குகைகளையும் தரிசித்தோம்.
பறந்து வரும் போதே இரு ஸ்ரீ மஹாத்மாக்கள்
பின்தொடர்ந்து வந்தனர். அவர்களில் ஒருவர்
கேட்டார் :- அன்பும் / ஆனந்தமும் நிறைந்த
பாபாஜி / முன்பு தாங்கள் பயணம் செய்த

**புஷ்பக விமான** / பயணமும்;
இப் போது பயணம் செய்யும் ஹெலிகாப்டர் விமான ";






ஒன்றாக தோற்றுகிறதா? மாறு பட்டதாய் தோற்றுகிறதா? பாபாஜீ?

வைத்தியம்:- கல கல கல கல கலகலவென (எம்கண்ணன்) சிரித்தது. பின் அவன் பதில் தந்தான்.


ஆகாயம் என்றால் வெட்ட வெளி.

ஸ்ரீமஹாத்மா:- வெட்ட வெளிதன்னை மெய் (உண்மை) யென நம்பி வைராக்கியமுடன் இருப்பவருக்கு "பட்டயம்" நாமரூபம் ஏதுக்கடி??? எனதம் அனுபவத்தைச் சொல்கிறார்.




அதாவது ஸத்தியத்தை உறுதியாக
நம்பி அதையே சார்ந்து இருக்கப்
பட்டவருக்கு **அஸத்திய** தோற்றம்
தோன்றுது தேவை இல்லை.
அதன் பொருளாவது: இதன் ரகஸ்யம்:

**நாமரூப** | ஜக, ஜீவ, ஈஸ்வராதிகள்
எல்லாமே மண் இல்லாமல் பாண்டம் இல்லை
ஆனால் மண்ணில் பாண்டமில்லை என்பது போல்
காவாதீத பரத்திற்கு அயலாக எதுவும் இல்லை
என ஸத்தியமாய் நம்பி **நம்** | இருப்பை உணர்ந்தபின்
நீங்கள் சொல்லும் எந்த நாமரூபத்திற்கு
விளக்கம் கொடுக்க முடியும்???



119

தாங்கள் யார்? யாம் யார்? ஆகாய
விமானமேது? புஷ்பஹ விமானமேது?
அவை இருக்கும் உலகம் எது? அவைகளை
இயக்குவது யார்? இயக்கத்தில் இன்ப
துன்பத்தை அனுபவிப்பவர் யார்?
மஹாத்மா??? சற்று உள் ஆழ்ந்து
செல்லுங்கள் மஹாத்மா? உண்மை விளங்கும்.
ஓர் ஸ்ரீ மஹாத்மா:- உண்மையின் பாபா
எங்கள் உணர்வின் பாபா! இப்படி
அத்த! அனுபவ விளக்கம் தர
தாங்களன்றி இக்கலியில் எவர் உளர்?
அணுப்பிரமாணமாவது சற்றும் கீழ்
இறங்காமல் பதிலளிக்கிறீரே!!!



120


எங்கள் நிலைக்கு சற்று கீழ் இறங்கி
லௌகீகமும் / தெய்வீகமும் / இணைந்த
நிலையில் பதில் வந்தால் எங்கள் மனம்
சாந்தியும் அமைதியும் பெறும்.

வைத்தியம்:— அவன் (கண்ணன்) அகட
பலமாக சிரித்துக் கொண்டே!!!
ஹே மஹாத்மாஜி இனி கேளுங்கள்.

(1) கலியுக ஆகாய விமானம் லௌகீக
நிலையில் விஞ்ஞானம் என்னும் அஞ்ஞானத்தால்
ஆனதாகும். ஆகவே அது வேகத்தோடு
கூடியதாகும்.

வேகம் என்றுவே அழிவு
பாதையாகும்.

|21|




உ தெய்வீக புஷ்பஹ விமானம் **பக்தி**

நிலையில் உருவாக்கப்பட்டதாகும்.
இது ஆன்ம உணர்வு என்ற நிலையில்
ஞான அம்ஸமாக தோன்றியதாகும்.
இது மெல்லிய புஷ்பங்களால் உருவானதாகும். மனதாவல்வ
அறிவின்பாவனையால் உண்டானதாகும்.

இது லோக **மாயா**/வுடையதாகும்.

அறிவு, எண்ணபாவனை பண்ணுவதுவரும்.
அறிவின் பாவனை மறைந்தால் இது மறைந்துவிடும்.
அத்யாவஸ்ய தேவையால் வரும். தேவைபூர்த்தியால் மறைந்து விடும்.
அறிவு நிறைவுபெறும்.




22

**ஸைத்** விஷயங்களுக்குமட்டுமே இது பயன்படும். வேகம் இல்லாததாகும்.

குறிப்பிட்ட நேரத்தில், குறிப்பிட்ட இடத்தி சென்றடையும். உடனே மறைந்துவிடும். நினைத்த உடனே இது வரும் என உணர்க.

ஹேமஹாத்மாக்களே! இதன் உண்மை என்னவென்றால்?:- **நாமரூப!** விமானம் ஆனாலும்; புஷ்பக விமானம் ஆனாலும்: **எல்லாம் மண்!**

ஆகிய பரமே. பரமாகிய யாமே. பரமாகிய நீங்களே.
இது சத்தியம்.



123


மற்றோர் ஸத்ஸங்கத்தில் 10
அன்பர்கள் அடங்கிய ஓர் கூட்டம்.

ஓர் ஸ்ரீ மஹாத்மா :- ஹேபாபாஜி!
ஒரு ஸத்ஸங்கத்தில் தாங்களுக்கு மாலைகள் நிறைய
போட்டு அன்பர்கள் நமஸ்காரம் செய்
தார்கள். அது சமயம் தாங்கள் வாக்கு:-

வைத்தியம் :- இன்று என்ன விசேஷம்?

அன்பர்கள் :- இன்று புரட்டாசி மீ
3வது சனிக்கிழமை குருதேவா!!!

வைத்தியம் :- புரட்டாசி சனிக்கிழமை
என்றால் அந்த ஸ்ரீ ஏழுமலையானுக்கு!




124

சாத்த வேண்டியது தானே பொருந்தும்?
இந்த ஏழைப் வைத்தியத்திற்கு ஏன்
சாத்துகிறீர்கள்???

அன்பர்கள்:- அவனும் தாங்களும்
ஒருவன் தானே குருதேவா???
உங்கள் வாக்கு

(1) வைத்தியம்:- அவனும்/யானும்/ எப்படி
ஒன்றாக முடியும்? (2) அவன் ஏழுமலை மீது
ஆனந்தமாக நிற்கிறான். (3) யாம் ஒருமையும் ஏறவில்லை.
(4) யாம் உங்கள் அனைவரின் திருவடிகளிலும்
கீழே ஒட்டி இருக்கும் "திருவடி தூளிதானே"?
மேலும் சொன்னதேது?



125

5 எமக்கு பதமுக்தியும் வேண்டாம்.

6 எமக்கு பரமுக்தியாகிய ஜீவன்முக்தி(யும்) வேண்டாம். 7 உங்கள் அனைவரின் ஸ்ரீபாததூளியாகவே!!!!! யாம் இருந்தால் போதும் என தாங்கள் யாக்கு வந்தது.

இதில் எங்கள் அனைவரின் கேள்வி? என்ன வென்றால் ???

1 பதமுக்தி வேண்டாம். அதுபொருந்தும்

2 பரமுக்தியாகிய ஜீவன் முக்தியும் வேண்டாம்.



யாம்கரை 126
யேற்றவந்
தவனேதவிர.
கரை யேற வரவில்லை.
ஐவரும், கரையும்,
நீங்களும், யாமும் ஒன்றே இரண்டல்ல.
ஆகவே?

3 உங்கள் அனைவரின் ஸ்ரீ பாததாளியாகவே
இருந்தால் போதும் என்றீர்கள். முதலில்

A இது உங்கள் பணிவை!
காட்டுகிறது. அதை நாங்கள் அனைவரும்
சிரம் தாழ்த்தி ஏற்றுக் கொள்கிறோம்.

இரண்டாவது

B உங்கள் வசீயத்தையே!
விட்டுவிட்டதாக தோன்றுகிறதே பாபா.
மனமும்! அறிவும்! மாறிமாறி வருவதால்
அவ்வாறு தோற்றுகிறதா பாபா ??? ஏன்!

C ஸ்ரீ பாததாளிக்கு அத்தன சிறப்பு
கொடுப்பதின் காரணமென்ன பாபா?

127

இருப்பது ஒன்றே. நடப்பது நலமே என சும்மா ஆனந்தமாக இருக்கவும்.



தத்தளிப்பவர் யார்? கரையேற்றுபவர் யார்? அலைபாயும் மனம் ஏது? சாட்சியின் அறிவேது? சர்வ சாட்சியின் பேரறிவு ஏது? ஜீவன்முக்தி ஏது? அதை அடைபவன் யார்? இவையெல்லாம் மனதின் மாயாஜால வர்ணஜாலம். ஆகவே

A வைத்தியம்:- பணிவே பானதயாக கொண்டவன் / பொறுமையே பூஷணமாக கொண்டவன் / அடக்கமே / ஆவரணமாக கொண்டவன் /

தன்மானம் / வெட்கம் / சூடு / சுரணை / லஜ்ஜை / கூச்சம் / இவைகளை அடியோடு நாசம் செய்தவன் வைணே? வைணோ?

அச்சாதனையாளர்கள் சாதிக்கவேண்டியது



இதில் கூறியவனுக்கு ஜீவன் முக்தி! (௨௮)

தனியாக இல்லவே இல்லை.

அவன் ஜீவன் முக்தனாகவே இருக்கிறான்.

வேறெதுவும் இல்லை. சாதனா!

முடிவுற்று நிறைவானதென அறிக.

(B) மேலே கூறிய நிலை பெற்றவனுக்கு;

"இறைகுரு! கிருபையும், அத்வைத

அகண்டான்மபாவனையும் "உயிர்மூச்சாகிவிடும்."

மேலே கூறிய இரண்டும் பெற்றவனுக்கு

சாதிக்கவேண்டியதும், அடைய வேண்டிய லட்சியமும்!

வேறொன்றுமில்லை யென்பதே ஸத்தியமாகும்.

அவன் சாதிக்க வேண்டியதை

சாதித்து லட்சியத்தை அடைந்துவிட்டான் என உணர்க.



அவனுடைய நடை உடை பாவனையானது

மனம் & அறிவு!

மாறி மாறிவரும் அன்பர்களுக்கு

இவர்! நிலையை அவர்களால் உணர முடியாதுதான்.

முற் கவனத்தை நாசம் செய்து, தற் கவனத்தோடு


நாம் அது — ஆக வேண்டும் என்றும்;
ஆகிவிடுவோம் „ ;
ஆகிவிட்டோம் „ ;

திடபுத்தியில் நம்பிக்கை!

உடைய மெய்யன்பர்கள் எவரோ? எவளோ?

அவர்களும் "ஜீவன்முக்தி அடைந்துவிட்டார்கள் இது சத்தியம்."

அப்படிப்பட்ட மெய் அன்பர்களோ இவரை அறிய முடியும்.



உ ஸ்ரீபாத தூளிக்கு அத்தனை சிறப்பா?


என ஓர் கேள்வி கேட்கப்பட்டது:-

வைத்தியம்:- இவ்வுலகம் ஜட சொரூபம் என்றும்; ஜீவ சொரூபம் என்றும் இருபிரிவால் நிரம்பி, பின்னிப், பிணைந்த ஒன்றாகும்.

ஜடசொரூபம் பரமாணுக்களால் ஆனது. ஜீவசொரூபம் ஜீவாணுக்களால் ஆனது.

அணு என்றுவே ஆன்மா என உணர்க.

ஜடசொரூபத்தை "பரமான்மா" ஜீவசொரூபத்தை ஜீவாத்மா எனவும் உணர்க.



3

ஆன்மா! பரமான்மா
பரப்பிரம்மம்! இவை
எல்லாம் அளவில்தான்
குறைவு கூடுதல் என்ற
பேதமேயன்றி இருப்பில் எந்த பேதமும் இல்லை.

**தூளி** சமஸ்கிருதம். **தூளி** தமிழ்.

தூளி தூளி என்றுவே பரமான்மா என

சத்தியமாய் உணர்க. கவனம் தேவை!


**ஜீவ** ஆத்மாவே (பரமாத்மா) **பரம** ஆத்மாவாகும்.

**பரம** ஆத்மாவே **பரப்** பிரம்மமாகும்.

**பரப்** பிரம்மமே காலாதீத **பரம்** ஆகும்.

ஆகவே "பாததூளிக்கே" யாம் முக்கியத்துவம் கொடுக்கிறோம்.

பாததூளியே நீங்கள். நீங்களே காலாதீத பரம்
எல்லாம் ஒன்றே. அதுவே யாம். அதுவே நீங்கள்.






இப்போது உங்கள் மெய் அறிவால் உணர்கிறீர்களா?

அங்கு குழுமியிருந்த ஸ்ரீ மஹான்கள் அனைவரும் ஒர்மித்த குரலில்:-

ஸ்ரீ பாதத்தை எங்கள் சிரம் மேல் தாங்கி "ஸ்ரீ பாததாணி"யை! பணிந்து அன்புடன் நமஸ்காரிக்கிறோம்.

உங்கள் வாக்கை ஸத்தியமாய் நம்புகிறோம்.


வைத்தியம்:- உங்கள் திட உறுதியான நம்பிக்கையே உங்கள் சாதனையாகும்! நாராயண!



133

பத்ரியில் வைத்தியம் அதன் அறையில் படுத்திருந்தது. அதிகாலை ௩ மணி அளவில் மூன்று மஹாத்மாக்கள் அங்கு பிரஸன்னமானார்கள். அம்மூவரும்! ஓர்மித்த குரலில் பிரணம்பாபாஜீ! என இருகரம் கூப்பி நமஸ்காரித்தனர்.

வைத்தியம்:- (நோவை நீக்கிய வண்ணம்) நாராயணா! நாராயணா! நாராயணா! ஹரேகிருஷ்ணா என அவரை அழைத்த வண்ணம் தட்டுண்டு தடுமாறி எழ முயற்சித்தது. அம்மூவரும் ஒருவர் அவ்வைத்தியத்தின் சிரசை பற்றினார். இருவர் இருபுஜங்களையும் பற்றினார்கள். அதி லாவகமாக மிருதுவாக தூக்கி அமரவைத்து குனிந்த நிலையில் அதன் திருவடியைப்பற்றி ஸலாம்ஜீ! என சொல்லிய வண்ணம் மும்முறை




வந்து ஸ்ரீமஹான்
கள் மூவரும் 134
1000 வருஷங்
களை கடந்தவர்களாகும்.
அவர்கள் தகுதியை சொன்
னது வயதையல்ல. ஞானானுபவத்தைச்
சொன்னார்கள் என அறிக.

நமஸ்கரித்தனர். அவ்வைத்தியரும்
அவர்கள் எழுந்து நின்று, குனிந்து திருவடிகளைப் பற்ற
எத்தனிக்கும் முன்பே; 6 கரங்களும்
அவ்வைத்தியத்தை அரவணைத்தவண்ணம்;
சிவசிவ, சிவசிவ, சிவசிவ, என உருகி
மும்முறை அழைத்தவண்ணம் ஒரே குரலாய்
போதும் பாபா போதும்!!! ஆசிபண்ணவேண்டிய
நீங்கள் நமஸ்காரம் செய்யலாமா? அதை
ஏற்க தகுதி வேண்டாமா? என்றனர்.

வைத்தியம்: ஹே அன்பான! அறிவான!
ஓர்மையான எம் மஹாத்மாக்களே!
யார் யாரிடம் பார்ப்பது?

படித்தவன்! வித்வான்! பண்டிதன்! வித்தை
கற்றவன்! பட்டம் பதவியிலிருப்பவன் ஒரு
வருக்கொருவர் தரம் & தகுதியைபார்க்க
வேண்டும்.



135

அத்வைத ஞானப் பாடத்தில் வேண்டியதெல்வாம்

வாக்கில் இனிமை. வாழ்க்கையில் எளிமை.

உடலாலும் / உள்ளத்தாலும் / பணிவு
கனிவு

இவை மூன்றும் இருந்தால் போதுமையனே.


இவை எல்லாவற்றிலும் பணிவு ஒன்றே போதும்.

எல்லாம் இயல்பாக அவனை
சாரும் என உணர்க.

ஓர் மஹாத்மா :- பணிவே பாதையாகக் கொண்ட
பாபா! அதை மட்டும் எங்களுக்கு அருளுங்கள்.


மற்றொரு மஹாத்மா :- இந்த வயதிலும்
தாங்கள் இந்த பத்ரி யாத்திரையை மேற்
கொண்டிருப்பது உங்கள் தண்ணண் கருணையே.

வைத்தியம் :- நீங்கள் இவ்வேழைக்கு தர்சனம்
தர வந்ததும் அவன் கருணையே. நன்கு கவனிக்கவும்.





உடல் ஜடம்தானே? புண்ணியபாப
வினைக்கூடுதானே? இளமை, நரை, திரை
மூப்பு, சாக்காடு, இவைகள் பொதிந்தது தானே
உடல். தோன்றி, இருந்து, விளையாடி, மாறி
மறைவது தானே உடலின் இயல்பு. இதில்
பால்யம் என்ன? வாலிபம் என்ன? மூப்பு என்ன?
இவைகளில் எது ஆனாலும் எல்லாம் புதுமை தானே?
அப்புதுமை கரூர் இருப்பவன் ஒருவன் தானே
அவன் அசைந்து இசைக்கவில்லையானால்?
எல்லாம் மண் தானே? இதில் என்ன வித்தியாசம்?
என்ன மோகம்? ஏன் விருப்பும், வெறுப்பும்???



137

சற்று உள் ஆழ்ந்து கவனியுங்கள்?


ஒர்பரிமஹாத்மா:— அந்தனையும் வைத்திய வாசகங்கள் பாபா! இந்த அறிவானது!

இந்த மனதுக்கு! எத்தனைமுறை எடுத்து, எடுத்து போதித்தாலும்? நம்பி உறுதியாக நிற்க மறுக்கிறதே பாபா?

வைத்தியம்:— நன்றாக கவனியுங்கள் எம்

(1) மஹாத்மா! மனம் காண்பதும் கேட்பதும், நாமே! ஜக ஜீவ தோற்றங்கள்தானே! எம் அன்பான மஹாத்மா???

(2) பாலில் வெண்ணை உண்டு என்பதை கண் காணவிட்டாலும்; உண்டு என அறிவு எப்படி நம்புகிறதோ? அவ்வண்ணம்.





ஒவ்வொரு தோற்றத்திலும் கண்காணு

அந்தர்யாமியாக ஒருவன்!

இருக்கிறான் என்று, இந்த மனமானது

மூடத்தனமாகவும்! முட்டாள்தனமாகவும்!

மடத்தனமாகவும்! மட்டித்தனமாகவும்!

சுத்த வைத்தியக்காரத்தனமாகவும்!!!


மனதை (மனதை)

நம்பச் செய்வதே சாதனை ஆகும் முறைதர்மா.

ஒருமுறை! ஒரே ஒருமுறை!! இந்த மனம் நம்பிவிட்டால்

திரும்ப மனம் இராது. அறிவே உண்டு.

இது வைத்தியம்.



139

ஓர் ஸ்ரீமஹாத்மா

இந்த நாமரூபமயக்கத்தை நாசம் செய்ய வேறுமார்க்கம் உண்டோ யாமறி?

வைத்தியம் :- அதி பலமாக சிரித்துவிட்டது

அன்பும்! அறிவும்! ஓர்மையும்! யான நம்பிக்கை கொண்ட எம் மஹாத்மாக்களே! திரும்ப திரும்ப! திரும்ப திரும்பச்! சொன்னது தான் திரும்பவும் சொல்கிறோம். எத்தனை முறை சொன்னாலும் அசையும் நிலையால்;

ஒருவனே! என்றும் "அசையா";

"ஒன்றே"

உறுதி நிச்சயம் வைராக்கியம் ஆகவில்லையானால் சாதனையும் இல்லை. சாந்தியும் இல்லை.



மனது உடைய
வனுக்கது
ஆச்சரியம் அதிசயமே.
ஞானிக்கு ஆனந்தமே.

தெய்வ விளையாட்டு:—

ஜீவனாகிய (140)
மனதை வை
த்து புண்ணிய பாப
மென்னும் காய்களை
நகர்த்தி ஜனனமரண
மென்னும் விளையாட்டை தெய்வமாகிய
குழந்தை விளையாடிக் கொண்டிருக்கிறது.

நாமரூப தோற்றங்கள் எல்லாம்!

வருவதும்! இருப்பதும்! விளையாடுவதும்!

மாறுவதும்! மறைவதும்! மாயா & மனம்! இவைகளின் விளைவு!

இவைகளின் திரு விளையாடல்களே!


தெய்வ விளையாட்டேயன்றி, ஜீவ விளையாட்டல்ல!

இங்கு நமக்கென்ன வேலை ???????

அவனை பணிவதும்! பின் அவன் அருளால் அவன் ஆவதும்!

ஸ்ரீ ஸத்குரு கிருபையால் அது ஆவதுமே நம் வேலை!

என சும்மா இருக்கவும்.




ஶ்ரீமஹாத்மா :-

ஹேபாபா! இந்த நாமரூப மயக்கம் என்ன பாடுபடுத்துகிறது பாபா? அதை நீக்கி?
இருக்க முடியவில்லையே யானா
மாவது, சும்மா இருக்க

"சும்மா இரு" என வாய் வலியாமல் நீங்கள் சொல்லி விடுகிறீர்கள். வலிய வந்து படாத பாடு படுத்தி விடுகிறதே பாபா? இங்கு என் கேள்வி :- நாமரூபம் மயக்குகிறதா? நாமரூபத்தில் **மனம்** மயங்குகிறதா?

வைத்தியம் :- ஹே மஹாத்மா! இந்த நாமரூபம் என்ன செய்யும்? அது வெறும் ஜடம் தானே? அவை கல்! மண்! மரம் ஆகிய ஜடம் தானே? அவைகளை ஒன்றுடன் ஒன்றை இணைத்து,





பெயரிட்டு அழைத்து, "உடைமை & உரிமை"
கொண்டாடி சொந்தத்தையும் எனதென்றும்
பந்தத்தையும்! இதுஇல்லாமல் என்னால் வாழ
முடியாதென்று பிடிப்பையும் சொந்த பாசத்தையும்!
உன் பெண்ணையும் மனமா? ஜடவஸ்துக்களா??

ஸ்ரீமஹாத்மா:— ஓர் ஆழ்ந்த சிந்தித்துணர்ந்தார்.
ஆமாம் பாபா! விட்டால் அவைகிட்டேயிருந்து
மண்ணோடு மண்ணைத் தேடிதான் கிடக்கும்.
"தொட்டால்" எடுத்தால்தான் கைக்கு வருகிறது.
அவைகளை தொடாமல் இருக்க என்ன செய்ய
வேண்டும் பாபா???



வந்தால் எடு.

போனால் விடு. 148

எதையும் விரும்பாதே

வெறுக்காதே

இருப்பதிலும் வருவதிலும் போவதிலும்

நடப்பதிலும், இது போதும் என நிறைவு கொள்.

வைத்தியம் வந்தால் எடு! போனால் விடு!

அதாவது அவன் வந்தால் கொடுக்கிறான் என எடு.

போனால் அவன் கேட்கிறான் என விட்டுவிடு.

உன் முன்னால் இருப்பவனையும் இன்னார் என நாம ரூபம் கொடாதே. ஸ்ரீபகவான் என உணர்.

உனக்கும் நான்! இன்னார் என நாமரூபம் கொடாதே. உன்னுள்ளும் ஸ்ரீபகவானே உணர்.


"அவன் ஆகிய மேனியில் அன்பை வளர்த்தோ

அதாவது நான் என தேக பாசத்தை வளர்க்காமல் "எல்லாம் அவனே" என அன்பை வளர்த்தோம்.

மடக்கிக் கொண்டான் எம்மை தன்னுள்.

அதாவது எம்மையும்! எமதுடைமைகளையும்!

எல்லாம் யாமே எனதுடைமை ஆக்கிக் கொள்வான் (கொண்டான்) என உணர்க.



இங்கு உனக்கு வேலை இல்லாமல் போய்விடு

எல்லாம் **அவன்** வேலையாகிவிடும்.

அங்கு **நீ** இருந்து கொண்டு குத்துகல்போலும் பட்டமரம் போலும்

எல்லாம் அவனே என்றும் அல்லது எல்லாம் நீ என்றும்

"**அவனிடம்**" பொறுப்புகளை கொடாமல்

நான்தான் என்னால்தான் என்று முட்டி!

மோதி! மண்டையை ஏன் உடைத்துக்கொள்ள வேண்டும்?

முடியலையே! நடக்கலையே! கிடைக்கலையே

வரலியே! கொடுக்கலியே! வாங்கலியே!

எதை உக.



ஓ

145

"மனதை" ஏன் புண்படுத்த வேண்டும்?

நடக்கட்டுமே! போகட்டுமே! வரட்டுமே!
எடுக்கட்டுமே! கொடுக்கட்டுமே! என்றும்,
போனால் போகட்டும் போடா
வருவது வரட்டும் வாடா
என போக்கும்! வரவும்! இவ்வாறு புண்ணியமதை
"நீ" இருக்கலாமே தொடர்ந்தே. நன்கு கவனி.
கிணற்று ஜலத்தை மழை வெள்ளம்
கொண்டு போகமுடியுமா?????
முடியவே முடியாது என



146

உடல்! உலகம்!
உறவு! சுற்றம்!
தொழில்! குடும்ப(ப்)
பிரச்சினைகள் உருவாவதே
கண்ணும்! காதும்! ஆகும். இவ்விரண்டையும்
அடக்கினாலே? வாக்கு தானே அடங்கும்.

கண்ணையும்! காதுகளையும்!!
இறுக மூடிக்கொண்டு,
இந்த வாயை நீ மூடவேண்டாம் அது தானே
மூடிக்கொள்ளும்
எல்லாம் சிவன்/அவன்
செயலே என அவனிடம் நீ அடங்குக.
உன்னால் அவ்வளவும் முடியும்!!!
உன்னால் முடியாததை இந்த ஊரைப் புலம்பாது.

இவ்வாறு சொல்லிக்கொண்டிருக்கும் போதே
அம் மூன்று யானைமுகமாக ஏக குரலில்
ஆனந்தம் பாபா! ஆனந்தம் பாபா! ஆனந்தம் பாபா!!!
என முழங்கிக் கொண்டே அந்தர்தியானமாயினர்
(அடுத்து ஓர் குகையில் சந்திப்போம்)



அக்குகையில் பன்னிரண்டு ஸ்ரீமஹாத்மாக்கள் இருந்தனர். ஒரு குரு மாதாஜியும் இருந்தார். அவ்வைத்தியம் ஒருவர் அழைத்துச்செல்ல அக்குகையில் நுழைந்தவுடன், தங்கள் தங்கள், ஆசனங்களை விட்டெழுந்து ஓர்மித்த குரலில்

**எல்லாம் ஒருவனே** | எல்லாம் ஒருவனே!! எல்லாம் ஒருவனே!!

ஏன **முழுமையும்!!!**

**எல்லாம் நலமே** | எல்லாம் நலமே!! எல்லாம் நலமே!! ஏன

**முழுமையும்!!!**

பணிவன்புடன், அடக்கமுடன் உரைத்தது. அதி ஆனந்தமாய் வரவேற்றனர். அவ்வைத்தியரும் இருகரமும் ஆகாயத்தை நோக்கி கூப்பிய நிலையில் துதித்துக் கொண்டிருந்தார்;



148

வாக்கால் நாராயணா! நாராயணா! நாராயணா!
ஸ்மரித்து ஆசி வழங்கிய நிலையில்.
அனைவரும் அவரவர் ஆஸனங்களில்
அமர்ந்தோம். அவ்வைத்தியம் சற்று பல
மாகவே சிரித்தது. பின்,
வைத்தியம்:— ஆன்மீக விளக்கங்கள்
கேட்பவர்கள் கேட்கலாம்.
ஸ்ரீ குருமாதா:— தாங்கள் கைகளால்
வரையும் மடல்கள் அனைத்தும் இங்கு
பாதுகாக்கப்பட்டு வருகிறது. இங்குவரும்
மெய்யன்பர்கள் அனைவருமே அம்மடல்
களைப் படிக்கின்றனர். அவரவர் நிலைக்கு
ஏற்றபடி பயனும் அடைகின்றனர். மேலும்
தாங்கள் எழுதிய இல்லற தர்மத்தில்
ஸ்ரீ ஸ்ரீதர்மம்! ஆதிநீதி நூல்களில்



குறிப்பிட்டதை அப்படியே ஸ்பஷ்டமாக
எளிமையிலும் எளிமையாகவும்!
வேறு விளக்கம் பெருமை வேயே விளக்கம்
ஸ்வய அநுபவம் ஆகும் நிலையிலும்;
மாமா
அதி அற்புதமாக அமைந்திருக்கிறது!
இங்கு வரும் அனைவரும்
றனர்.
படித்து ஆனந்தமும்! அனுபவமும்! பெறுகின்
தே!

ஆமாம் பாபா? உடல் ரொம்ப தளர்ந்து விட்ட
வைத்தியம் :- அம்மா மாதாஜி! பொறு பொறு
பொறு மாதா! சரீரம் என்றுமே ஜீரணிக்கப்பட்ட
ஓர் **பிண்டம்** தானேயம்மா? அது வெறும்
பீற்றத்துருத்தி! பேய்ச்சுரை தோற்றம்!
(ஸ்ப. தத்தாவ்) (ஸ்பீக்கர்)



156

நான்கு முழம் ஒன்பது ஓட்டை

நாற்றப் பாண்டம்! நான் முழத்
தொண்பது! ஆசைக் கயிற்றில் ஆடும்
(பிணியே உடல்)
பம்பரம்! ஓயா நோய்க்கிடம்! ஓடும்
மரக்கலம்! சதுர் முகயாணன்
தைக்கும் சட்டை! விதி வழி தருமன்
(புண்ணை லை ஊறவைத்)
வெட்டும் கட்டை! ஊனாறு புன்றோல்!
உதிரக் கட்டை! ஒன்பது வாசல்
கோட்டை! கண்ணில் பீளை! காதில்
குறும்பி! வாயில் கோழை! மூக்கில் சளி!
மலம் & ஜலம்! இரு ஓட்டைகள்!

இப்படியாக **நாறிப்போன**

உடலின் மேல் எத்தனை பிரியம்? எத்தனை
நம்பிக்கை? எத்தனை கவர்ச்சி?
எத்தனை அழகு? எத்தனை வசீகரம்
எத்தனை புகழ்? எத்தனை கீர்த்தி?
எத்தனை அந்தஸ்து



உ

நன்றாக உணர்வாய் மகராஜ்????

இத்தனையும் அந்த உடலுக்கா

இவ்வளவே இல்லையம்மா? பின் எதற்கு???

"உடம்பினுள்" ஒன்றும் ஆத்மாவுக்கே!

அந்த ஒன்று ஆத்மா எனஅறிக. இந்த உடலின் உள்ளும், மற்றும்


அனைத்து நாமரூபங்களிலும்; உள்ளும் புறமும்

மின்சாரம் போலும் சர்வவியாபகமாய் பரவி

நீக்கமற நிறைந்து இருப்பதாலும் இயங்குவதாலும்

அனைத்து உயிரற்ற ஜட சொரூபங்களும்

இருப்பு, இயக்கம், இன்பமாயும் தோற்றிறதென்று உணர்க.






ஸ்ரீமஹாத்மா :- ஓம் அன்பானபாபாஜி!

உடல் இல்லையென்றால்; அனைத்து நாமரூபங்களும்! அதைச்சார்ந்த உலகமும் இருப்பதேது? இயங்குவதேது? இன்பதுன்பம் தோற்றுவதேது?

வைத்தியம் :- மண் இல்லாமல் பாண்டம் (உடல்) ஏது?

ஸ்ரீ குருமாதா :- அப்பாண்டமாகிய உடல் அசைவது ஏதனால்? அசைப்பது எது?

வைத்தியம் :- அசைவது வினையால். (மனதால்) அசைப்பது மாயரவால். அசைவது தூலம் ஆகும் அசைப்பது சூட்சுமம் ஆகும்.



153

அதாவது அசைவது பரமாணுக்கள் ஆகும்

அவை ஜடம்

அசைப்பது ஜீவாணுக்கள் ஆகும்.

பரமாணுக்கள்:- அண்ட, ரண்ட

பிரம்மாண்ட உலகம், கோள்கள், சூர்ய
சந்திராதிகள் மற்றும் மண் & கல் ஆகும்.

ஜீவாணுக்கள்:- மனிதனை உட்பட

84 லக்ஷம் ஜீவ கோடி உடல்களும்,
தாவர ஜங்கமங்களும் ஆகும்.

ஸ்ரீமந் மஹாத்மா:- இதை அதிசூட்சுமமாய்
சொல்வதென்றால் எப்படி பாபா?

வைத்தியம்:- ஹரிஓம் யென
ஆதிமஹாஞானிகள் சொல்வர்.



154


இடைச் செருகல் வார்த்தையின் விளக்கம்:-
"கண்ணைக் கண்டு
கருத்தால் உணரகூடியதால்
ஒளிமயமே என உணர்க்"

மற்றோர் பரிமாணமா:- விளக்கம் தேவை?

வைத்தியம்:- முதலில் ஒளியென்பதை வெளிச்சம் எனமட்டும் பொருள் கொள்ளாதவர்கள் கண்ணால் காணும் அனைத்து நாமரூப உலகங்களும் ஒளி மயமே என உணர்வால் உணர்க. (கண்ணைக் கண்டு கருத்தால் உணர கூடியதால் ஒளிமயமே.)

அதாவது இருப்பதுவே யோர் தோற்றுவதனைத்தும் ஒளி மயமே.

ஒலிஎன்பது கண்ணால் காணும் அனைத்து தோற்றங்களையும் இன்னது இன்னதென சப்தார்த்தத்தால் விளக்கும் ஓசைகள் எல்லாம் ஒலியே!





கண்ணால் காணக்கூடியது ஏது ஆனாலும். எவரானாலும் வார்த்தையாலேயே (ஒலியாலேயே) விளங்கப்படுகிறது. ஏது? எவரென விளம்பப்படுகிறது. பின் அறிந்துணரப்படுகிறது.

அவைகளையும் / அவர்களையும் / இது & அது இவர் & அவர் / என வார்த்தால் விவரித்தால் "நாம, ரூப, ஜகத், ஜீவ," தோற்றங்களால் உண்டான உலகம் பிரகாசிக்கும் என அறிக.

எல்லாம் ஒண்ணே / எல்லாம் ஒன்றேயென உன் மனமும் வாக்குமாகவும் / பழகி அனுபவிக்கவும் பழகிக்கொண்டால்



யோகமாயாவால் மண்ணும் மறைந்து யோகமாயாவும் மறைந்து :- யோகமா ஸ்கைபுரு ஆகும். அதுவும் யா மறைந்த நிலையில் எங்கும் ஒரே ஒளிமயமே. அதுவே அகண்டப் பேரொளி ஆகும்.

"நாம ரூப, ஜக ஜீவ" தோற்றங்களால்

"உண்டான இவ் உலகம்"

ஜடம் ஆகி, பின் மண் ஆகி;


"யோக மாயாவால் மண்ணும் மறைந்து;"

(ஸ்கைபுருவம்) மாயாவும் ,, ;

"அகண்டபேரொளியாய்"

"இருக்கிறேம்" என்றோர் இருப்பை மட்டும் உடையதாய்

சர்வவியாபியாய் நீக்கமற நிறைந்திருக்கும்.






அந்த ஒன்றுக்கு!
காலாதீ

அங்கு குழுமியிருந்த அனைவரும்,
ஸ்ரீபாத நமஸ்காரம் செய்து, கண்ட
ஆனந்தத்தில் மூழ்கி, பின் அதன்!
கருணையால்" இங்கு மீண்டோம்.
பின் ஸத்ஸங்கம் தொடர்ந்தது.

ஓர் ஸ்ரீமஹாத்மா:— ஓ எங்கள்
அறிவுமயமான
பாபாஜி! ஓர் சிறிய விளக்கம் தேவை???
அதாவது ஸ்வயஞானானுபவ நூலில்;



கீழே உள்ள கேள்வி (58)

(1) உலகம் தானே மறையுமா? அல்லது நாம் மறந்து விடுவோமா?

(2) அல்லது உலகமும் நாமும் ஒன்றாகி விடுவோமா?

99 பாடலிலும்; 100 வது பாடலிலும்; கடைசி இரு அடிகளின் கருத்து எப்படி அமைகிறதென்றால்?:— (A) தூங்குபவன் கையில் உள்ள புஷ்பமானது, எப்படி தானே அவன் கையிலிருந்து அவன் அறியாமலேயே, எப்படி நழுவி விடுமோ? அப்படி இந்த "நாம ரூப உலகமும்; உண்திருட்டி யிலிருந்து உண்பார் கையிலிருந்து தானே" நழுவி மறைந்து விடும் என வருகிறது.

(1) உலகம் மறையுமா? அல்லது நாம் மறந்து விடுவோமா?

(2) அல்லது உலகமும் நாமும், ஒன்றாகி விடுவோமா?



159

(B) ஓர் மரத்தில் பழுத்த பழமானது அம்மரத்தின் காம்பைவிட்டு தானே விலகி அகலுமா? அம்மரம் அப்பழுத்ததை இனி நீ வேண்டாம் என ஒதுக்கி விட்டு விலகுமா?

(1) பழமாகிய நாம் விலகுவோமா?

(2) நாமரூப உலகம் (மரம்) நம்மை விலக்குமா?

இவ்விரண்டிற்கும் விளக்கம் வேண்டுமம்மா?

வைத்தியம்: ஸ்ரீ சற்று பலமாகவே சிரித்துவிட்டது

பின்:- மெய்யன்பர்களே! கவனம் தேவை.

(A) எந்த ஒரு மனிதனும் / தூய வாஸனையோடு ஓர் புஷ்பத்தை நுகர்ந்து வாஸனையை அனுபவித்து கொண்டிருக்கும்போது, கைநழுவ விடமாட்டான். பிரிய வாஸனையானது



உ

சாமான்யமாக சாகாது. ஆனால்???

ஆன்மாவோடு

அவன் தூக்கத்தில் லயமாகி இணையும் போது

இவள் விடவில்லை

இவன் மனம் மலரை விடவில்லை. கருவிக்

கரணங்கள் ஓய்ந்து ஆன்மாவோடு ஒன்றி

இணைந்த தன்மையினால் இயக்கவில்லை.

தற்காலிக நீக்கம் ஆனாலும் அவனை

விட்டு அகல்கிறது மலர். உலகம்

அங்கு மலர் உலகம் தான் அகன்றே தவிர.



கருவி கரணங்கள் மனம் விடவில்லு

மனம் ஓய்ந்திருக்கிறது யான்

விழித்தவுடன் மவரை எடுத்துக்கொள்

அதேபோல்!

"நிருவிகல்ப சமாதியில்" இருக்கும்போது

உலகம் உன்னைவிட்டு "தற்காலிகமாக"


விலகும் "சமாதி கலைந்தவுடன்" உலக

எண்ணம் மீண்டும் தொடரும் எனஉணர்கவு

அகண்டானந்த ஸகஜ சமாதிநிலை

பர்வதத் குரு திருவையால் "பெற்றுவிட்டால்"

நாமரூப உலகம் சர்வ நாசமாகும் திரும்பி வராது.



குறிப்பு:- இதை உள் ஆழ்ந்து கவனிக்கவும்

ஓர் பாடலில்:- தூங்காது தூங்கும் நிலை கிட்டும் மட்டும், தைல தாரை போல்: ஜக, ஜீவ, நிலையில் விழிப்புணர்வாக இருப்பாயாக. அதாவது நாமரூபங்களை சர்வ நாசம் செய்வாயாக.

நாசம் செய்யும் வழி:- காண்பதனைத்தும் பொம்மலாட்டமே. எல்லாம் பதுமைகளே. எல்லாம் மண்ணு வானதே. மண்ணாகிய பரமே. பரமாகிய நாமே/ பரமாகிய நீங்களே/ என



163

ஸகஜ ஞானி:-

பயிற்சி & முயற்சி எந்த சாதனையும் இல்லாமல் எந்த விநாடியும் மௌன நிலையில் இயல்பாக இருத்தல்.

சொன்னால் போதாது. அப்படியே ஆக வேண்டும்.


உங்களால் அவசியம் முடியும். இது ஸத்தியம்.

தூங்குவது சாதனையல்ல. விழி

புணர்வோடு உணர்ச்சி, எமோஷன், டென்ஷன், இல்லாமல், செத்தாரைப் போல் திரிவான்"

"ஸகஜஞானி"

"இதுவே அகண்டானந்த சகஜ சமாதி ஆகும்."



B மரத்தில் பழுத்த பழமானது அம்மரத்தை
விட்டு தானே விலகுவது போல் இவ்
வுலகம் உன்னை விட்டு அகல வேண்டும்.
இதுவே அகண்டானந்த ஸகஜ சமாதி நிலை:—


இங்கு மரமானது:- இலை, தழை, பூ,
பிஞ்சு, காய் என நாமரூப ஜக ஜீவ
ஜகமாக விளங்குகிறது.

"பழம்" சற்று "வித்தியாசமாகிறது".
மேலே சொல்லிய ஐந்து நிலைகளில்,
கலகலப்பாகவும், வசீகரமாகவும்
ஜொலிக்கிறது. பழம் பொத், பொத்தென்று
இருப்பதால்; "வயோதிகம்", அதாவது



"ஞானப்பழம்" (ஒதுங்கிக் கொள்கிறது) என ஒதுக்கப்படுகிறது.

"ஞானப் பழம்" என்றுவே, நாமரூப ஐக ஜீவ தோற்றங்களிலிருந்து நீ உதவாதவன், உதவ முடியாதவன் என்று ஒதுக்கப்பட்டதாகும். அப்பழமும் யாம் உதவாதவனே! உதவ இயலாதவனே!! எம் காலம் முடிந்து விட்டது. காலம் கடந்தவன் யாம் தெய்வத்துக்குத்தான் உதவ முடியுமே தவிர உலக்கு உலகிற்கு உதவிவாது என ஒதுங்கிக் கொள்கிறது. அதனால் ஒதுக்கப்படு ஒதுங்கிக் கொள்கிறது.



166

ஆகவே மரத்தை (நாம் ரூப ஜகத் ஜீவ தோற்றத்தை) விட்டு

நழுவிய பழம் / மீண்டும் மரத்தில் ஒட்டாது.

அதாவது: தாங்குபவன் கையில் உள்ளவர்

அவன் விழித்தவுடன் அவன் எடுக்கவும் செய்யவர்

இது நிர்விகல்ப சமாதி

ஆனால்?

மரத்தில் பழுத்த பழம், அம்மரத்தை விட்டு நழுவி

கீழே விழுந்து விட்டால்: திரும்பவும் அம்மரத்தில்

ஒட்டாது. அம்மரமும் அதை ஏற்காது.

இது ஸகஜானந்த சமாதி

ஆகவே நாமரூபங்களை வெறுத்து ஒதுக்க வேண்டாம்.



இனக்கவர்ச்சி:-

"இன்னார் என்றும் இன்னது" 167

நாமரூபகுண பேதம்

காண்பது இனக்கவர்ச்சி ஆகும்.

நாமரூபங்களை "நீ அவன்!"

என பேதம் களைந்து ஒன்றுபடுத்தபடவும்.

அதனால் குண தோஷம் நாசமாகும். அதாவது?

இனக்கவர்ச்சி நாசமாகும்.


பின்?

எஞ்சி இருப்பது "நாமரூபமல்ல." "புதுமைகள்!" என ஒன்றே.

ஆகவே தன்னை காணும் புதுமைகளே; எல்லாம் மண்ணை

வானத்தே | எல்லாம் மண்ணே | காவாத்தே பரம

என ஒன்றுபடுத்தி ஐக்கியமாக்க வேண்டும்.



168

இதுவரை ஒலித்த பரஜோதிக்கு! ம்.

அவைவரும் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்தோ
திரும்பவும் சத்சங்கம் தொடர்ந்தது.


ஸ்ரீ குருமாதா :— பேத குண தோஷம்
நாசமாக என்ன செய்ய வேண்டும் பாபா?

வைத்தியம் :— எல்லாம் ஒருவனே. விநாசிதக்கு

ஏற்றபடி அவை அவைகள்! அவரவர்கள்!!

"வேஷமணிந்து" ஸ்ரீ பகவானே தம்மாயாவால்

காம காரியங்களை கர்ம நாடகத்தை (பாரபட்ச தோஷம் இன்வரமல்)
திறம்பட நடத்துகிறான் என முழு நம்பிக்கையாக
ஓர்ந்துணர்ந்தால் பேத குண தோஷம் நாசமாகும்.



169

ஓர் ஸ்ரீமஹாத்மா :- ஆத்ம ஞானமென்றால் என்ன?

வைத்தியம் :- கலியுகத்தில்!

"விசிஷ்டாத்வைதம்" அனுபவிக்காலம்

"ஆத்மஞானம்" என்னும் "அத்வைதம்"


அடைவது வெகு வெகு வெகு கடினம்.

ஆனாலும் முடியும்!

(A) ஓர் நாம ரூபமுள்ள ஸ்ரீபகவானிடம் முழுமையாக சரண் புகுவதே "விசிஷ்டாத்வைதமாகும்."

இதனால் ஸ்ரீபகவானின் சொரூபஸ்திதி பெற முடியாது. அதுதேவையில்லை. ஆனால்?

ஸ்ரீபகவானின் ஞானுபவத்தை பெற முடியும். அது போதும்.





ஸ்ரீ பகவானின் "குருனுபவத்தை" பெற்று விட்டால்

(A) குண தோஷம் நாசமாகும். (B) பிராரப்தம்

சுகமாக முடியும். (C) வினை & விதி வழு அழுந்து

மனைசிரமம் இல்லாமல் முடியும்.

இந்த "மூன்றிலும்": ஸ்ரீ ஸத்குரு அருளும்!

"நான்கு மஹா வாக்கியங்கள் ஸ்திரப்படும்:"

அதனை அத்வைத ஞானமாகிய அதாவது

ஆத்ம ஞானமாகிய ஜீவன் முக்தி பெறலாம்.

மற்றோர் ஸ்ரீ மஹாத்மா:— அன்பான பாபாஜீ!

காமத்தை வெல்வது எப்படி?

வைத்தியம் :— காமம் என்பது ஆண் & பெண்!

உறவு மட்டுமல்ல, நாம ரூபத்தில் மயங்கி



171

விடாப் பிடியான "வெறி" ஆசையும்

"பேராசையும்" (பெரிய வெறியான ஆசையும்)

இது நாசமாக காமம் ஆகும் என அறிக.

வேண்டுமானால், ஓர் ஸ்ரீ மஹாத்மா சொல்கிறார்:

மாமன் மகளோ? மைத்துனியோ??

யாம் அறியோம்! "அது ஓர் பெண் ஆகும்."

(கண்ணைக் கண்டவுடன்) காமன்!

கணையால் (எம் மனம்) "அனலால் வேகுதே என்

அங்கு:- மாமன் மகளாகவும்! மைத்துனியாகவும்!





நீயே / என ஆகிவிட்டாய் ?????

"எல்லாம் நீ" என்பதுவத்திய பிரமாண உறுதி ஆகிவிட்டால்?

ராம் ஞானப் பார்வையினால் "காமன்களே"

ஓர் நொடியில் வெந்து சாம்பலாகிவிடும் என்கிறார்.


அதாவது காம நோயை (பேயை) விரட்டும்

ஒரே அஸ்திரம் (நான் / எனதற்ற) நீ / உனதற்ற

ஒரே பிரம்மாஸ்திரமாகும்.


வேறு எந்த அஸ்திர ஸஸ்திரங்களாலும் காம

நோயை / பேயை / விரட்ட முடியாது என உணர்க.



173

மற்றோர் ஸ்ரீமஹாத்மா:- அன்பான பாபாஜி!
ஓர் சூக்ஷ்கியமான! ஆனால் அதிசிக்கலான!
கேள்வி ஒன்று:- ஸ்ரீமத் ஆதிசங்கர பகவத்
பாதாள்! அத்வைதத்தை ஸ்தாபித்தார்.
அவ்வழிவந்த ஸ்ரீமத் ராமானுஜ ஆச்சாரியாளோ
விஸிஷ்டாத்வைதத்தை போதித்தார். பின்
வந்த ஸ்ரீமந் மத்வாச்சாரியரோ துவைதத்தை!!!
"இதுதான்! உண்மை என சாதித்தார்" என்றும்,
உணர்கிறோம்.
மூன்றுவதாக கூறும் ஸ்ரீ ஆச்சாரியாள்!
ஸ்வாமிகள்! துவைதத்தை போதிக்காமல்
இதுதான் என சாதித்த காரணம் என்ன? அவருக்கு
அத்வைதமும் விஸிஷ்டாத்வைதமும்! பற்றி




174

உரை முடியவில்லையா? அல்லது உரை
முயற்சி செய்யவில்லையா? அல்லது தெரிந்தும்
தெரியாதவர் போல் நடித்தாரா??? இது
இங்குள்ள எல்லா ஸ்ரீமஹான்களுக்கும்
பெரிய சர்ச்சையாக உள்ளது. இதுபற்றி
தாங்களின் உணர்வுபூர்வமான கருத்து என்ன பாபா?

வைத்தியம் :— இது ஓர் முக்கியமான கேள்வியே.
சிரத்தையுடன் கேட்கவும். மேலே கூறிய
ஒவ்வொருவரும் 500/400/300/ என
ஆண்டுகளுக்கு முன்பின் அவதாரம்
செய்தவர்களும்
ஒவ்வொருவருடித்தியும்
கோரப்பிடி இருக்கிக்கொண்டே கலி தேவனின்
வந்தது.

175



ஸ்ரீ சங்கரர் காலத்தில் அத்வைதமே
ஏற்புடையதாக இருந்தது.

ஸ்ரீ ராமானுஜர் காலத்தில் விசிஷ்டாத்வைதம்
ஏற்புடையதாக இருந்தது.

ஸ்ரீ மத்வாச்சாரியர் காலத்தில் **துவைதம்தான்!** ஏற்புடையதாக இருந்தது!

பக்தியும்! ஸ்ரீ பகவத் பிரேமையும்! இதை
சார்ந்த "ஒழுக்கக் கட்டுப்பாடும்"!!!
நலிவடைந்து விடக்கூடாதே! என்ற
"உலக ஜீவர்களின் நன்மையை கருதி.



176

இக்கலியுக
த்தில் கணவன்
நிலைக்கு அவன்
மனைவி உயர்ந்துவிட்
டாள் அதனால் மதிப்பு &
மரியாதை சீர்குலைந்து
விட்டது. (மனைவி படிப்பு பட்டம், பதவி
பணம் அந்தஸ்து, கௌரவம் & வேலை ஆகிய
வைகளால் உயர்ந்து விட்டாள்)

"ஸ்ரீமத் மத்வாச்சாரியார்" துவைதத்தை
வலியுறுத்தி கூறினார் என அறிக. அதாவது
ஸ்ரீபகவான் ஸ்ரீபகவான்தான் (பக்தன் பகவானாக முடியாது என்றும்)
ஓர் பக்தன் பக்தன்தான் என்றும்
கணவன் கணவன்தான் மனைவி மனைவிதான் என்றும்
மனைவி கணவன் நிலைக்கு உயர முடியாது என்றும்
ஆண்டான் ஆண்டான்தான். அடிமை அடிமைதான் என்றும்
அடிமை ஆண்டானாக முடியாது, ஆண்டான் நிலைக்கு



177

அதைப் போலவே ஆண்டான் & அடிமை பேதம் ஒழிந்து மேலே கூறிய நிலையில் ஆண்டானுக்கு அடிமை உயர்ந்துவிட்டான் யுகம் கலி ஆகும்.

அதனால் பெரியவர் / சிறியவர் / மதிப்பு மரியாதை கெட்டுவிட்டது.


அடிமை உயரமுடியாது என்றும்; உயரக்கூடாது என்றும்;

பக்தன் / ஸ்ரீபகவானாக முடியாது என்றும்; ஸ்ரீபகவானாக ஆக்கூடாது";

வலியுறுத்தி / சுவாமிஜி ஸ்ரீமத் மத்வாச்சாரியர் அவர்கள்.

காரணம் :— அறியாமையால் "அனைத்தும் அறிந்தவரே" ஸ்ரீபகவானும் நானும் ஒன்றே / என்றும்; நானும் ஸ்ரீபகவானாகலாம் என்றும்

(A) ஸ்ரீபகவானிடம் உள்ள மதிப்பு & மரியாதை" இல்லாமல் போய் விடும்.



178

B நாமும் அவனும் "ஒன்றுதானே" என்ற

அலக்ஷ்ய புத்தி உண்டாகிவிடும்.

C நாம் இறைவனை அடைய வேண்டும் அதாவது

நாம் "பரமபதத்தை" அடைய வேண்டும் என்ற


"லக்ஷ்யத்தை" இழந்துவிடுவோம்.

D ஸ்ரீபகவத் ஒழுக்கம், கட்டுப்பாடு, நம்பிக்கை,

வைராக்கியம், மதிப்பு, மரியாதை இவை

களின் அர்த்தம் புரியாமல், "ஆச்சாரம் கெட்டு

அனச்சாரம் மேலிட்டு, நாஸ்திகம் மேலோங்கி."



179


தெய்வீகம் என்றால் என்னவென்ற கேள்விக்குறி உண்டாகி "உலகம் நிர்மூலமாகிவிடும்."

உலகம் இன்ப உலகமாக இருப்பதற்கு; "துவைதம்" தேவை என உணர்க.

உலகம் பேரானந்த உலகமாக இருப்பதற்கு; விசிஷ்டாத்வைதம் தேவை.


உலகை மறக்கவும், அதை இல்லையென மறுக்கவும், பிரம்மானந்தமயமாவதற்கு அத்வைதம் நாம் அகண்டானந்தமயமாவதற்கு தேவை.

யாம் யாமாக இருக்கிறோம் / யாம் இருக்கிறோம் / இருக்கிறோம் என்ற ஓர் இருப்பு மட்டும் தேவை.



குறிப்பு.

துவைதம் / விசிஷ்டாத்வைதம் / அத்வைதம் /
ஆகிய இம்மூன்றையும் எப்படி கடைப்பிடிக்க
வேண்டுமெனில் ???.
(1) நாமரூபமுள்ள ஓர் இறைவனிடம் முழு
நம்பிக்கையின் வைராக்கியம் கொண்டு;
எல்லாம் நீயே / எல்லாம் உன்னுடையதே / எல்லாம்
உனதே / அவனன்றி அணுவும் அசையாது,
என்று முழுமையாக சரண் புகுந்தால்;
"ஜீவன் நான்" என்ற "ஜீவகர்த்ருத்வம்" நாசமாகும்.
இதனால் துவைதபயம் / சர்வ நாசமாகும்.
நாமரூப சந்தேகம், காங்கம், கவந்தபயம் சர்வ நாசமாகும்



81


உ இந்த "சர்வார்ப்பணத்தால்" ஸ்ரீபகவத் "சொரூப லக்ஷணம்" பெற முடியாது என்பது ஸத்தியம். ஆ......ன.......ல் ???

ஸ்ரீபகவத் "குணைபவம்" பெறலாம் அது ஸத்தியம்.

ஸ்ரீபகவத் சொரூபம் வரும் / கிருபை சாதிக்கும் / பின் மறைந்துவிடும். ஆனால் ஸ்ரீ பகவத் "குணைபவம்" மனம் நீங்கவிட தோஷ குணங்களை சர்வ நாசம் செய்து ஸத்வ குண ஸம்பன்னனாய் மிளிரச் செய்யும். நாம் ஸ்ரீபகவானாக முடியாது. ஸ்ரீபகவத் அம்ஸமாகலாம்.

ஸ்ரீபகவத் சொரூபம் மறைந்துவிடும் அது தெய்வீகம்.

"ஸ்ரீபகவத் குணைபவம்" அத்வைதத்தின் அடிப்படையாகும். இதுவே விசிஷ்டாத்வைதம் ஆகும்.



182

3 ஸ்ரீ பகவத் குணானுபவம் பெற்றுவிட்டால்,

அதாவது

ஸத்வ குணம் என்ற ஏக குணம் பெற்றுவிட்டால்


“நிர்க்குணம்”

வெகு எளிதாகும்.

நிர்க்குணத்தின் அஸ்திவாரமே எல்லாம் ஒன்றே என்ற “அபேத திருஷ்டி”, ஆகும்.

அதாவது :— நாம ரூப, ஜக ஜீவ, சொரூபங்களும், தாவர ஜங்கமங்களும், மண் மடு முதலிய ஜட சொரூபங்களும், காணும் எதுவும் ஆனாலும், எவரையும் ஆனாலும், மண்ணுக்கு அன்னியமாயில்லை. மண் இல்லாமல் பாண்டம் இல்லை. ஆனால் மண்ணில் பாண்டமில்லை.

அ•••••••• தா•••••••• வை•••••• து?




(உலகம்)

**பரம்** | இல்லாமல் நாமரூப ஜகஜீவனில்லை.

**பரத்தில்** | நாமரூப ஜகஜீவ உலகமில்லை.

இதுவே அத்வைதம். அந்நிலை பெற, ஓர்
ஸ்ரீ ஸத்குரு கிருபை அவஸ்யம் வேண்டும்.
அவரால் நான்கு மஹாவாக்கிய ரகஸ்யங்களும்
தெரிந்து கொண்டு.

ஸ்பஷ்டமாக, உள்ளங்கை நெல்லிக்கனிபோல்
காணலாம் என்றும், பெற்றுவிடலாம் என்றும்
சொல்லக் கூடாது. "**அது**"வாகவே "**நாம்**"!
இருக்கலாம். அல்ல, அல்ல! இருக்கிறோம்.
என ஒலித்து
பர ஒலி நிறைவு செய்தது.



184

மேலும் ஸத்ஸங்கம் தொடர்கிறது.


ஸ்ரீ குருமாதா:- ஹே அன்புருவான பாபாஜீ!
"நாம ரூபம்" வலுப்பெற காரணம் என்ன?

வைத்தியம்:- நாமரூபம் வலுப் பெற
"நான்! எனது!" என்ற அஹங்காரமமகாரமே
காரணமாகும்.

ஸ்ரீ குருமாதா:- அக்காரணத்தை சற்று
விளக்கலாமா?

வைத்தியம்:- ஆகா விளக்கலாமே.

(1) நாமரூபம் அனைத்தும் ஜீவனானாலும், ஜட
மானாலும், எல்லாம் உயிரற்ற இயக்கமற்ற
"ஜடமேயாகும்." அதற்கு ஓர் வடிவமும்! ஓர்
நாமமும் கொடுத்தது இந்த மனமே. இந்தநாமரூபம் வேறுமென்று கேட்கவில்லை
ஜடசொரூபமோ! ஜீவசொரூபமோ! கேட்கவில்லை



185

(2) "நான் தேடினேன் என்றும்" என்னுடையது என்றும்;

"உடைமை & உரிமை" கொண்டாடியதும் மனமே.

(3) அதுவே ஓர் வெறி & வேகமான குணமும்; புண்ணிய பாபமும்; அதுவே ஜனன மரணமும்

"வலிய" ஏற்றுக்கொண்டதும் இம்மனமே.

ஆகவே நான் & எனது நசித்தால், எல்லாம் சர்வநாசமாகும் என அறிக.

ஸ்ரீ குருமாதா:- அவ்விரண்டையும் ஏன் கெடுக்க முடியவில்லையாமா???

வைத்தியம்:- கூறுக் கொடுக்கும் ஸ்ரீ குருதேவர் "நான் எனது" நாசம் செய்யென சொல்லிக் கொடுக்கிறாரே தவிர, அவர் நாசம் செய்யவில்லை.



அவரால் ஏன் (186)
சாதிக்க இயல
வில்லை? :- இதை
உணர் :- பணம் / பட்டம்
பதவி / அந்தஸ்து / கௌரவம்
இவ்வைந்தும் நம் மின் இல்
வரவேண்டும். அதன் பின் நாம் செல்வக் கூடாதும்.

ஸ்ரீ குருமாதா :- அவரால் ஏன் சாதிக்க இயலவில்லையாபா?

வைத்தியம் :- சிரித்துக் கொண்டே!!!

பணம் / பட்டம் / பதவி / அந்தஸ்து / கௌரவம் / என ஐந்தாகும் மாதாஜி!!!

ஸ்ரீ குருமாதா :- இவைகளில் ஏதேனும் ஒன்று இல்லாமல் வாழமுடியாதேபாபா!


வைத்தியம் :- நீ வாழவந்தாயா? "சாக" (சாதிக்க) (மௌனம் சாத) வந்தாயா?

அருளா? பொருளா? (இருளா?) முடிவு புவர் சாய்ஸ்?

அங்கு கூடியிருந்த ஸ்ரீ மஹான்கள் அனைவரும் பலமாக சிரித்து விட்டனர். ஓர் ஸ்ரீ மஹாத்மா எழுந்தார். அவர் :- பாபா என்றும் பாபா தான். தம் சொல்வதை கடைப்பிடிப்பவர் இவர் ஒருவர் தான்.


(மற்றோர் ஸ்ரீ மஹாத்மா எழுந்தார்)

187



அம்மஹாத்மா :— அறிவே வடிவான எம்பாபாஜி!
ஓர் சிறிய விளக்கம் வேண்டும். அதாவது
"ஸ்வய ஞானுபவ நூலில்" :— 104 வது பாடலில்
5 & 6 வரிகளில் வருவதாவது :—
நாமமெல்லாம் கடந்தெங்கும் நிறைவாய் நின்ற
தத்துவமாம் சிவம் ஆனை உண்மை சொன்னேம் :
என்ற இருவரிகளும் "அதீதமான ஒன்றை"
விளக்குவதாய் தோற்றுகிறது பாபா! ஆகவே
அவைகளை சற்று விளக்கினால் நலம் பெறுவோம்!
வைத்தியம் :— உங்களுக்கு என்ன தோற்றுகிறது!
அதை சற்று தொட்டு காட்டுங்கள் கேட்போம்.
மற்றும் விளக்கத்தை "அதுவாகிய அவன்"!
அருளுவான் மஹாத்மா!

188



ஸ்ரீமஹாத்மா :- யாம் ஓர் சிவ பக்தன்.

எம் சிவனை தாண்ட எம்மால் முடியவில்லை பாபா

ஆகவே எம்மால் விளக்கம் தர இயலவில்லை.


வைத்தியம் :- யார் உங்களது ஸ்ரீ சிவபெருமானை தாண்டச் சொன்னது?

எம்பெருமானின் "பஞ்சாக்ஷரம்" என்ன மஹாத்மா?

ஸ்ரீமஹாத்மா :- ஓம் "நமசிவாய" ஆகும் பாபா.

வைத்தியம் :- இந்த "பஞ்சாக்ஷரத்தை" திரும்ப திரும்ப சொன்னால் என்னவாகும் தெரியுமா மஹாத்மா?

தவனியுங்கள் :- நமசிவாய! நமசிவாய! நமசிவாய! நமசிவாய! நமசிவாய! என்பது உம்முள்ளேயே மறைந்து! "நம்ம சிவம்! நம்ம சிவம்! நம்ம சிவம்! நம்ம சிவம்! நம்ம சிவம்!" என மருவி!





உம்முள்ளேயே மாயிமறைந்து!

நாம் சிவம்! நாம் சிவம்!! நாம் சிவம்!!!

என "விளிந்து"! உம்முள் இருந்த ஒன்றை

உமக்கு காட்டிக் கொடுத்து விட்டு, அது

உம்முள்ளேயே மறைந்து கலந்துவிடும் மஹாத்மா.


நாம்சிவம்

உம்முள் இருந்த "ஸ்தே" என்பது வெளியில் இல்லை.

சொரூபமாகும் மஹாத்மா!

அதைக் காட்டி கொடுத்தது உம் குரு! ,, ,, !


உம்முள் இருப்பாய் உள்ளது பார்! ,, ,, !



190


வைத்தியம்:- இனி அவ்விரு வரிகளின் விளக்கம்
கேளுங்கள் மஹாத்மா!

1. முதல் வரியை கவனிக்கவும்:- நாமமெல்லாம்
கடந்து, எங்கும், ஓர், நிறைவாய் நின்ற.
நாமம் என்பது பெயர் ஆகும். அதாவது
ஓசை ஆகும். அது சூட்சுமம் ஆகும் "
ஓ காரபிரணவ ஒலி ஆகும். அதுவே ஓம்
"அனைத்து ரூபங்களையும்" விளங்குவதும்!.
துவக்குவதும்!! "இருப்பை" சுட்டிக்காட்டுவதாகும்.
அப்படி விளக்குவதாயும், துவக்குவதாயும்." இது
இதுதான்" என, இருப்பை உணர்ந்த வைபவியாளும்,



"ஒன்றுண்டு"!!! என்பதை எப்படி உணர முடியும்? எவர் எவர்க்கு உணர்த்த முடியும்?

ஆகவே "ரூபம்" துவங்குவதும், இலங்குவதும் நாமம் என்ற ஒலியால் என உணர்க. இந்த நாமம் என்ற ஒலியை எல்லாம் பிரணவத்தை கடந்ததாயும், நீக்கமற நிறைந்ததாயும், அத்ணானந்தமயமாயும், அகண்டப் பேரொளியாயும் "இருப்பை மட்டும்" உடையதாயும் உள்ளதே காலாந்த பரமாகும் என ஸ்ரீமஹான்கள் சொல்லக் கேளீர்!



அந்த ஒன்று "இருப்பை மட்டும்" உடையதாக

இருந்தாலும் அதை / உண்டு என்றும்;

அதை / இருக்கிறது / இயங்குகிறது //

(ஸத்) (ஸித்)


அதனால் உலகில் யலி இன்பமும் / உண்மையில் ஆனந்தமும் /

உண்டாக்குகிறது / உண்டாகிறது // என

விளக்க வரி (தூல) வடிவிலும், வாக்கு சூட்சும

வடிவிலும்; உணர்த்துவதே பிரணவம் / என்ற

ஓம் காரமாகும். இதனை வந்ததே



193


"தெய்வீகமும்", லௌகீகமும், ஆகுமென
(ஈசன்) (ஜீவன்)
என ஸ்ரீ ஆதி ஸ்ரீ மஹான்கள் வாக்காக அறிகிறோம்.

② இரண்டாவது வரியை கவனிக்கவும் :-

"நிறைவாய் நின்ற" தத்துவம்,
"சிவம்" ஆன தத்துவமாம் = உண்மை சொன்னோம், என வருகிறது.

இந்த தெய்வீகத்தையும், லௌகீகத்தையும்,
இணைத்த & இணைந்த நிலையே தத்துவமாகும்.

இந்த சிவத்தின் ஆணை என வருவது.



194

இங்கு "சிவம்", என்பது தற்பத வாச்சிய பரமாத்மாவும், த்வம்பத வாச்சியஜீவாத்மாவும், "அஸி" பத வாச்சிய காவாதீதுபரத்திற்கு அன்னியமில்லை.

அதாவது "தத்துவம், அஸி"!!

இறைவனையும், பரம்பொருளையும், இணைத்து சுட்டிக்காட்டுவதே "சிவம்" & "சிவன்" என்னும் இரு பதமாகும்.

சிவம் மீது ஆணையிட்டு சொல்கிறார்.



196

அப்பாலுக் கப்பாலாய்:—

நேற்று, இன்று,

நாளை, அப்பாலுக்கும்

அப்பாலாய் நின்றதெதுவோ? அதாவது,

அதாவது நாமெல்லாம் கடந்து எங்கும்

ஓர் நிறைவாய் நின்ற:— வாக்குக்கும்

அதாவது ஸப்தார்த்தத்திற்கும், நாத

பிரம்மத்திற்கும், அதாவது பிரணவ

ஓம்காரத்திற்கும், " மௌனயோக

மாயாவுக்கும், உணர முடியாததாயும்,

உணர்த்த முடியாததாயும், அப்பாலுக்

கப்பாலாய் நின்றதெதுவோ, " ஐயன்



இ காலாதீதமானதெதுவோ? (196) அதுவே பாழாய் போய் நின்றதுவே அப் பாளம் பாம் ஆகும்.

எவையுமில்லாததெதுவோ! "அதை" எவர்? உரைக்க முடியும்? உணர்ந்த முடியும்?


மனோ நிலையானாலும் சரி | அறிவின் நிலையானாலும் சரி |

பேரறிவின் நிலையானாலும் சரி | பேரறிவு இங்கு தேவை இல்லை. ஆனாலும் உபசார நிலையில் சொல்லப்பட்டதாகும்.

"அதை" உணரவும், உணர்ந்தவும் முடியாது.

அப்படிப்பட்ட "காலாதீத" பரத்திற்கு நாம் அனைவரும் நமஸ்காரம் செய்வோமென


அங்கிருந்த அனைவரும் அதற்கு சாஷ்டாங்க நமஸ்காரம் செய்தோம். அக்குகையில் நடைபெற்ற ஸத்ஸங்கம் பூரண நிறைவானது.



197

மற்றோர் குகையில் இருபது மஹான்கள் கூடியிருந்தனர். அங்கும் ஸத்ஸங்கம் ஆரம்பம் ஆனது.

ஓர் ஸ்ரீமஹாத்மா:- பேரறிவே உருவான பாபாஜீ ஸ்வய ஞானனுபவ நூலிலிருந்து ஓர் கேள்வி? அதாவது நிதாகன் வைராக்கிய பாடல்களில் கடைசி இருபாடல்களிலும்; கடைசி வரியில் வருவது:- (A) "அகண்டமான ஆன்மாவில் அநவரதம் அமர்ந்துநிற்போம்." என ஓர் பாடலில் வருகிறது. (B) அகண்டான்ம ஆழியினில் அசஞ்சலமாய் அமர்ந்தோம்யாமும். எனவும் ஓர் பாடலில் கடைசி அடியில் வருகிறது. இதில் எம் கேள்வி என்னவென்றால்?



198

(1) "அகண்டமான ஆன்மா வேறு! "அகண்டான்ம ஆழி வேறு??

(2) இங்கு அநவரதம் அமர்ந்து நிற்போம் எனச் சொல்லும் காரணம் என்ன?

(3) அங்கு ஆழியினில் அசஞ்சலமாய் அமர்ந்தோம் யாமும் எனச் சொல்லும் காரணமென்ன?


இம் மூன்று கேள்விகளுக்கும் விளக்கம் வேண்டும்பாமா???

வைத்தியம்:- நல்ல பயனுள்ள கேள்வியே?

கவனியுங்கள்:- பாட நிமித்தமாக

அகண்டமான ஆன்மா வேறு! அகண்டான்ம ஆழி வேறுதான்

ஸ்வய அனுபவநிலையில் இரண்டும் ஒன்றே!



199

ஸ்ரீமஹாத்மா:- பாடம் வேறு? அனுபவம் வேறு பாபா?

வைத்தியம்:- "பாடம்" என்பது பலவிளக்கமாகும்.

"அனுபவம்" என்பது "ஓர்மித்த கருத்தாகும்". மஹாத்மா!


பாடம்:- பல காரியமாகும். அனுபவம் ஒரே காரணமாகும்.

ஸ்ரீமஹாத்மா:- மன்னிக்கணும் பாபா! இனி விளக்கம் கொடுக்கலாம்.

வைத்தியம்:- கவனம் தேவை!

(A) அகண்டாண்மா:- இதில் இருபிரிவு உண்டு.

பாடநிமித்தம்:- ஆண்மா/பரமாண்மா/என இருபிரிவாகும். ஆண்மா:- "குவஜீவம்". பரமாண்மா "கூடஜீவமாகும்" மஹாத்மா!



200

பரப்பிரம்மம்:- அளவற்ற சமுத்திரமாகும்.

இப்படி மூன்று நிலைகளில் பாட நிமித்தமாக,

பரிமளங்கள் பிரிக்கிறார்கள் என உணர்க.

(ஜலம்) (ஜலம்) (ஜலம்)
ஜீவன் / குடம் / சமுத்திரம் / இவை மூன்றும்

அளவில்தான் சிறியது பெரியது என்ற

பேதமே யன்றி இருப்பில் ஜலம் ஒன்றே தான்.


மேலும் இதில் மறைந்திருக்கும் உண்மை என்னவென்றால்

முதல் வரியில் வரும் "அகண்டமான ஆன்மா" என்பதை

(பாடம்போது வேண்டாம்)

"கண்டமான" ஆன்மா என பா

விளக்கத்திற்காக எடுத்துக்கொள்ள வேண்டும் என் மஹாத்மா.



201

அந்த கண்டமான ஆன்மா என்பதை !!!

ஏகசன்நிதி என்றும்; அதை விஸிஷ்டாத்வைதம்

என்றும்; அளவுக்கு உட்பட்ட "கடல்/"


" ; பது முக்தி என்ற வைகுண்டம் / கைலாயம்

பரமபதம் என்ற பாற்கடல் என்றும் உட்பிரிவின்

பலபிரிவுகள் உடைய இடமாக ஸ்ரீஜ்ஞானிகள்
கூறுவர்.

இவைகளும் "இளைப்பாறும்" இடமே தவிர

ஜீவன் முக்தியல்ல என அறிவால் உணர்க.



௨௦௨

ஆகவே அகண்டமான ஆன்மா என்பதை

"கண்ட" ஆன்மா என உணர்ந்தால் போதும்.

ஆனால் பாராயணம் பண்ணும் போதும் "அகண்டமான

ஆன்மா" என படிக்கலாம். படிக்க வேண்டும்.

அதனால் தான் :- அகண்டமான ஆன்மாவில்


"அஹம் ப்ரஹ்மம்" "அமர்ந்து" நிற்போம் என்று ஆசிரியர்.

(அகம் பிரம்ம பாவனையால்)

அதாவது எந்த விதையும் ஸ்திரமாக அமர்ந்து

தைவ நாதர போல் உறுதியாக நந்துக்கல் போல் நிற்போம்.

என்றார் உரை ஆசிரியர்.



203

மேலே கூறியருளியில் "அகம்பிரம்மபாவனையில்"

"அயராது" அமர்ந்து நின்றால்???

அடுத்தபாடலில் கடைசிவரியில் கூறும்:-

"அகண்டானந்த ஆழியில்" அசஞ்சலமாய் அமர்ந்தோம்; யாமும்! என்ற நிலை பெறலாம். ஆகவே???

கண்டமானது அளவுக்குட்பட்ட "கடல்"

அகண்டமானது அளவுகடந்த சமுத்திரம்

என்றும் ஸ்ரீமஹான்கள் வாக்காக அறிகிறோம்.



நாம் :- எசன்யும் நம்மோடு இணைத்து இருமையான நிலை.

யாம் :- எசனும் நாமும் பரமும் ஒன்றாகி கரைந்து கவர்ந்து, ஒருமையான நிலையென உணர்க.

அகம்பிரம்மாஸ்மி மஹாவாக்கிய பாவனையானது

அது நாம் நாம் அது என்ற பிரம்மான்ம பாவனையோடு கூடியதாகும் என உணர்க.

இதை பரமாத்ம பாவனை என்று ஸ்ரீமான்கள் சொல்வர்.


யாம் அது அதுவேயாம் (விசிஷ்டாத்வைதம்)

பாவனை என்ற நிலையானது எசன்யும் தமக்குள்ளாக்கி

மேலே கூறிய பரமாத்மாவே நாம் என ஆகி

நாம் பரமாத்மாவாகி நாமும் மயமாகி

அதாவது யாம் என்ற ஒருமை ஆன நிலையாகும்.



ஓம்

இதுவே **அகண்டான்ம** பாவனை ஆகும் என

ஸ்ரீ மஹான்களின் வாக்காக அறிகிறோம்.

நாம் அது | அதுவே நாம் || ஆரம்பமான நிலையாகும்.

யாம் அது | அதுவே யாம் || முடிவான நிலையாகும் |

முந்தையது **இருமை** ஆகும். | பிந்தையது **ஒருமை** ஆகும் என அறி


முந்தையதை **ஆன்ம** பாவனை என்றும் |

பிந்தையது **பர** பாவனை யென்றும் ஸ்ரீ மஹான்கள் சொல்வர்.

பதமுக்திக்கும் | பரமுக்தியாகிய ஜீவன்முக்திக்கும் |

கண்ட ஆன்மா | அகண்டான்மாவுக்கும் |


இதில் விடை கிடைத்துள்ளது. என உணர்வால் உணர்க



௨௦௫

மற்றோர் ஸ்ரீமஹாத்மாவானவர் கேட்ட கேள்வி:-

ஸ்ரீமஹாத்மா:- பேரறிவின் எங்கள் அருமை பாபாஜி! இது வரை நாங்கள் கேள்விப்பட்டதைத் தாங்களும், வேறெவரும் சொல்லாததாயும்; அமைந்ததே இந்த "கண்ட ஆன்மா" ஆகும். இதை அளவுக்கு உட்பட்ட கடல் அரவு! என்றும்; அதுவே பரமபதம் எனச் சொல்லும் பதமுக்தி என்றும்; அதுவே பாற்கடல்! வைகுண்டம்! கைலாயம்! என்னும் "தெய்வ ஸ்தாபனங்கள்" என்றும். அவைகளும் நிலை இல்லாதன என்றும்; "ஜீவன் முக்தி" ஒன்றே நிலையானதென்றும்; தாங்கள் திருவாக்கால் அறிகிறோம்.



ஆகவே? "பத முக்தி"யாகிய அவைபற்றிய இரண்டொரு கேள்விகள் ஈஷு தின்றதை பாபா? அதுபற்றி கேட்கலாமா பாபா?

வைத்தியம் :- தாராளமாக கேளுங்கள் மஹாத்மா. "அதுவாகிய" "அவன்" பதில் தருவான். இவ் வேளை வைத்தியம் அவன் "கை" பதுமைதானே!

ஸ்ரீ மஹாத்மா:- இப்படி பணிவை! உங்கள் வசதியமாகவும்; உங்கள் பாதையாகவும்; கொண்டதால் எந்நிலையிலும் தானு "அவசிய புத்தி" இல்லாமல் நாசமாகி விட்டதை நாங்கள் அனைவரும் உணர்கிறோம்.





ஆகவே உங்கள் "ரகசியம்" மட்டும் பரிபூரணமாக உங்களை விட்டு விலகாமல் இருக்கிறது.


எங்கள் அனைவரின் கேள்வியாவது:—

1. "பரமபதம்" எனச் சொல்லும் மூன்று ஸ்தாபனங்களும்! எதால் ஆனது?

2. அங்கு நிரந்தரமாய் நித்தியமாய் வாசம் செய்பவர்கள் யார்? அல்லது எது??

3. அவர்களுக்கு அல்லது அவைகளுக்கு "கால" அளவு உண்டா? இல்லையா?? இருந்தால் எவ்வளவு காலம் என சொல்ல முடியுமா??

இம்மூன்று கேள்விகளுக்கும் விடை வேண்டும் யாமா?




209

வைத்தியம் :— இது வரை "வெளி வராத" !!!
எவரும் வெளியிடாத

கேள்வி & பதில்களாகும். அவன் அருளால்
அவன் திருத்தாள் வணங்கி;
அவனே தரும் பதில் !!!

1 கேள்வி :— பரமபதம் எனச் சொல்லும்
மூன்று ஸ்தாயனங்களும் எதால் ஆனது?

பதில் :— கைலாயம் :— ஸ்படிகங்களால் ஆனது.
ஸ்படிகம் :— "பனிக் கட்டி" யானது 12 வருஷங்களுக்கு
குறையாமல் மழை, வெயில், காற்று
ஆகிய இம் மூன்றுக்கும் !



உருகாமல் "இறுகி வஜ்ரம் போல்!

ஸ்திரப்பட்டு விட்டால் ஒளி மிகுந்த "ஸ்படிகம்" ஆகும் ஏனை ஆதி [illegible]


ஸ்படிகத்தால் ஆனதே கைலாயம் சொல்வக்கேள்வி!

(2) வைகுண்டம் :- "ஒளி பொருந்திய மாணிக்கங்களாலானது."

நவரத்தினங்களும் இதில் அடங்கும்

(3) பாற்(ல்)கடல் :- "பால் போன்ற வெண்மை"

அலையற்ற! அசைவற்ற!! பெரும் கடல்!!!



௨॥

ஓடலாம்

நடக்கலாம்!

இதில் நிற்கலாம்! அமரலாம்!! படுக்கலாம்!!!

குறிப்பாக:- அகண்ட ஐக்கிய ரஸத்தில்;

ஒரு பகுதியை மஹான்கள் சொல்லக் கேள்வி!!

௨ கேள்வி:- அங்கு நிரந்தரமாய் வாசம் செய்பவர்கள் யார்? அவ்வது ஏது??

பதில்:- நிஷ்காம்ய பக்தியினால் உயர்

தர்மத்தை நான்கு யுகத்திற்கும்

ரக்ஷையை பெற்றதனல்;

நித்யஸூரிகள் என்று சொல்லக் கூடிய

பரிமளத்துக்கள்! அங்கு;



உலகங்கள் 212 என்றால் **மனம்** படைத்த மனிதன் இருக்க வேண்டும். அங்கு அறிவு! படைத்த தேவ தெய்வங்களும், அவர்களோடு ஒன்றிய நித்திய சூரிகளும்

அந்த "மூன்று ஸ்தாபனங்களிலும்"!!!

அதை உலகங்கள் என சொல்லக்கூடாது.

வாசம் செய்கிறார்கள் என ஸ்ரீமஹான்கள் சொல்லக் கேள்வி.

அதை சொர்க்க பூமி எனவும் சொல்லவாகாது.

அவர்களின் "இருப்பும் & இயக்கமும்":-

**"ஸ்ரீபகவானின்" / "த்யானமும் & சேவையும்"** / என ஸ்ரீமஹான்கள் சொல்வர்.

வேறு எந்த கர்மாவும் அங்கு கிடையாது. கர்மா சேர்க்கவும் முடியாது. கர்மாவை அனுபவிக்கவும் முடியாது. முடியாது என சொல்வதைவிட கிடையாது என்றே சொல்லலாம். காரணம் அங்கு மனம் இல்லை. ஸ்திரமான அறிவு உண்டு.



வாஸம் செய்வதால் அதை உலகம் என சொல்லாமல் ஸ்தானங்கள் என உபசாரமாக சொல்கிறார்கள். தர்மம் நிறைவாகி 4 யுகங்களும் முடிவடைந்தால் பூமியில் தோன்றுவதும் அறிவின் சொரூப தேவ அம்ஸம் பொருந்தியவர்களாக (213)

(3) கேள்வி:— அவர்களுக்கு அல்லது அவைகளுக்கு கால அளவு உண்டா??? இல்லையா? இருந்தால் எவ்வளவு காலமென சொல்ல முடியுமா??

பதில்:— "நிஷ்காம்ய கர்மா / நிஷ்காம்ய பக்தி" செய்து அந்த தர்மத்தை பெற்றவர்களே! அம் மூன்று ஸ்தானங்களுக்கும் செல்ல முடியும். வேறு எவர்க்கும் அங்கு அனுமதி இல்லை.

நீ கண்டு அந்த ஸ்தானத்தை அடைய முடியும். அங்கு பேரானந்தத்தில் நிலை பெறலாம்.



ஜனனம் எடுக்
க வேண்டும் அது...
கலியுகமாக இரு
ந்தால் மனவசம் அகப்
பட்டே ஆக வேண்டும்.
பின் சாதனையால் உயர்
வடையவும் செய்யலாம். தவற
விட்டுவிட்டால் மணம் வசம் அகப்பட
வும் செய்யலாம். ஜனனம் மாறவும் செய்யலாம்.

அது "காம" ஸ்தாபனமாக இருப்பதால்.

4 யுகங்கள் என ஓர் கணக்கு உண்டு.

எந்த காலத்தில்; எந்த யுகத்தில்; எந்த நேரம்.


அங்கு செல்கின்றோமோ? அந்த நேரம் வரும் வரை

4 யுகமும் பூர்த்தியாகி எந்த விடை முடிவடைகிறதோ


அந்த விடையே எங்கு இருந்து "தாவத்தை" விட்டு

வந்தோமோ அங்கு ஓர் புனித {மனிதன்} ஜனனம் எடுக்க வேண்டும்.

மீண்டும் ஜனனம் தொடரும். விட்ட குறை / தொட்ட குறை




யெனை இதை ஸ்ரீமஹா நாங்கள் சொல்லக் கேள்விப்படுகிறோம். அந்த மூன்று வித பாவனைகளிலும் பரிபக்குவாளை ஒன்றி இருப்பதாயும் அங்கு தவக்கலில்லை "தர்ஸனம் & தெய்வ சேவை" இடையறாது கிடைப்பதினாலும் பசி தாகம் மோஹம் எந்த சுபமும் அசுபமும், அசைவு, ஆசை இராது. காரணம் மனம் இல்லை. ஸ்திரமான அறிவு ஒன்றே உண்டு. பேரறிவு அங்கு தோற்றுவதில்லை. காரணம்: பரமுக்தியாகிய ஜீவன் முக்தி என்ற வார்த்தைகளே அங்கு இல்லை.



ஓர் ஸ்ரீமஹாத்மா:— ஹே பாபா! அங்கு பேரறிவுக்கு இடமில்லையென்றால்; யோகமாயாவின் இருப்புஸ்தானமான "மணிக்ரீவம்" என்ற ஸ்தாபன சம்பந்தம் கொண்டதா???

வைத்தியம்:— மணிக்ரீவம் என்பது மாயாசம்பந்தம் கொண்டதாகும். மு!

அங்கு நவகோடி ஸித்தர்கள் மட்டும்! வாசம் செய்ய முடியுமேயன்றி வேறெவரும் அங்கு செல்வதில்லை. செல்ல முடியாது. திரிகர்த்தாக்களுமே அங்கு செல்வதில்லை. செல்லும் வேலையும் இல்லை. "அது யோகமாயாவின் கூடம்."



217

ஆனால், இந்த மூன்று ஸாதனங்களும்


மனம் மட்டும் இல்லாத - ஆனால் "யோகமாயர்" உடையதான ஸாதனமாகும்.

உண்மையை சொல்லப்போனால் பக்தி மிகுந்த பக்தர்கள் மட்டும் அங்கு "பேரானந்தநதியில்" இருக்கிறார்கள் என

ஸ்ரீமஹான்கள் வாயிலாக அறிகிறோம்.

ஆத்ம ஞானிகளுக்கும் அங்கு காரியம் இல்லை யென சொல்வர்.

ஸ்ரீமஹாத்மா :- ஆரம்ப பயிற்சியில் ஈடுபடு.



ஆத்ம ஞானிகளுக்கு அங்கு செல்ல வாய்ப்பு உண்டா பாபா?


வைத்தியம் :- "ஆத்ம ஞானமே" மனோ நாசம் ஆகும்.

அங்கும் மனம் இல்லை தான். ஆனால்?

"சஞ்சிதம்! "பிறவியின் வித்தாகும். அது "நாசமாகாத் தன்மையிறல்" அவர்களுக்கு பிறவியை தொலைக்க முடியவில்லை. ஆனாலும்?

எங்கோ ஒரு சில ஞானிகளுக்கு முக்தி "காரண நிமித்தமாக" அழைப்பு வரலாம். அவர்கள் மட்டும் அங்கு சென்று வரலாம்


( ஸ்ரீ நாரதர் யோகீ )





மற்றொரு ஸ்ரீ மஹாத்மா :- ஆமா ரம்பாபா. தாங்களைப் போன்று. (அவர் சிரித்தார்)

வைத்தியம் :- (சிரித்துக் கொண்டே) இது ஓர் "உதவாக்கரையே"! அவன் (கண்ணன்) கைப் பதுமை தானே? அவன் இதை ஆட்டி வைப்பதால் எங்கு செல்கிறோம்? எங்கு வருகிறோம்? என்ன செய்கிறோம்? என்ற விவரம் இல்லாமல் போய் விட்டது. பதுமை எது அறியும்? இயக்குபவனே "அனைத்தும்" அறிவான்!



அவர்களின் 220 சிரத்தையின் பூரண நம்பிக்கையில் வைராக்கியமானது:

"நீ கண்டு"!

அவரவருக்கு பலனாய் அமைந்தது.

(ஏக குரலில்)

அனைவரும்:- அன்பும்! அறிவும்! பணிவும்! கனிவும்! கருணையும்! எளிமையும்! "உருவான" எங்கள் பாபாஜி! எங்களையும் உம் போல் "ஆக்கிவிடலாமே"!!! "ஏன் காலதாமதம்"???

வைத்தியம்: "ஆக்கிவிடுவோமே"?

"ஆக்கிவிட்டோமே"!

அனைவரும்:- "ஆகிவிட்டோமே"!!

ஆனந்தத்தால் அனைவரும் ஆகிவிட்டோம்! ஆகிவிட்டோம் ஆகிவிட்டோம்! என ஆனந்த கூத்தாடிய நிலையில் ஸத்ஸங்கம் பூரண நிறைவானது.

நடப்பது நலமே. த இ பாபா

இருப்பது ஒன்றே.



ஸத்திய வாக்கை (1)


ஸத்தியம் பேசு.
தர்மம் செய்.
நாவை அடக்கு.
கருணையோடு இரு.

"ஸத்தியம் பேசினால், தர்மம் நிலைபெறும்."

நான் & எனது, என்பது;
நாமரூப, ஜகஜீவ, தோற்றத்தின்
இருப்பும் & இயக்கமும், தர்மாவின்
இணைப்பும், அதனை தோற்றும்;
ஜனன மரண கணக்கும் ஆகும். &

நான் & எனதை, துறந்தால் &
விட்டால் மறந்தால் & இறந்தால்;
"உலகம்" (நாமரூப ஜகஜீவ தோற்றங்கள்)
உன்னை, துறந்து, மறந்து, இறந்து
விடும். இது ஸத்தியம்.

இருப்பது ஒன்றே.
நடப்பது நலமே. குரு பாபா கண்ணன்.



# மனம்


அமைதீ & ஸாந்தீ !!

ஆகும் மார்க்கம்.

__பக்தன்__ :- உனக்குள்ளே யாம்
இருக்க, எமக்குள்ளே நீ இருக்க,
இந்த "மனக்கவலை" என்பிரபோ?
இதை நீக்குவது உனக்கொன்றும்
பெரிய காரியம் இல்லையே கண்ணா?

__கண்ணன்__ :- உனக்குள்ளே யாமும்
எமக்குள்ளே நீயும் இருக்கும்போது,
நான் & எனது இருக்கத்
தேவை இல்லையே கொழந்தே!!!
அவ்விரண்டையும் நீ விட்ட மறு
கணமே உன்மனம் அமைதி & ஸாந்தி
ஆகிவிடுமே கொழந்தே !!!

இருப்பது ஒன்றே.
நடப்பது நலமே. — பாபா கண்ணன்.





பக்தன் :— ஹே பிரபோ! கருணை கடலே! கிருபா ஸாகரமே! இவ்வுலகில்

1. சமுத்திரங்களும் கரையின்றி நிற்கிறது.
2. விண்மண்டலங்கள் ஒரே சீராக சுழல்கிறது.
3. கொடும் மிருகங்களும் & பறவைகளும் ஓர் கட்டுக்குள் அடங்கி சஞ்சாரம் செய்கின்றன.
4. பஞ்சபூதங்களும் தமக்குரிய கடமையை மட்டும் செய்து கொண்டு அமைதியாய் இருக்கிறது?
5. அஷ்டமாசித்திகளும் & மந்திரசக்திகளும்! கற்றவர்களுக்கு மட்டும் கட்டுக்கடங்கி, அவ்வாதவர்களிடம் பாராமுகமாக இருக்கிறது.

இந்த மனம் மட்டும் ஏன் பிரபோ எல்லோரையும் துன்புறுத்துகிறது?

கண்ணன் :— உன் மனம் மட்டும் நான் ஆணவத்தை விடாத காரணம் என்ன தெரிந்ததா? அவ்விரண்டினும் பட்டு படுகின்ற துன்பம் போதாதா தெரிந்ததா?



உ

முற்கவனத்தால் மனிதன் மட்டும் சிதறுண்டு போய் விருகிருண். எவ்வாம் நவமே & நல்லவர்களே, என உண்மையை ஓர்மைப் படுத்துவாயாக.

இன்னமும் அவஸ்தைப்பட வேண்டுமா கொழுந்தே? எம் காரியங்களை உன் காரியமாக ஏன் கற்பனை செய்கிறாய்? எம் சிருஷ்டியை உன் பொருள் என ஏன் கற்பனை செய்கிறாய்? எல்லாம் யாமாக இருக்கும் போது நான்? ஏன்? எவ்வாறு? எங்கிருந்து? எதற்காக வந்தது நீ ஏது? உன் பொருளேது? உன் இயக்கமேது? நான் ஐ நாமாக மாற்ற முடியாமல் எண்ணாததை செய்கிறாய்???

அவ்விரண்டையும் மாற்று. உன் மனம் மறுகணம் அமைதி & சாந்தி ஆகும் கொழுந்தே!!!

இருப்பது ஒன்றே.

நடப்பது நவமே.

கண்ணன்.




Abode of Love

You Are Everything!